# பயிற்சியும் மேம்பாடும்

தமிழ்நாடு மின் துறையில் 1948ம் ஆண்டு முதன் முதலில் மேட்டூரில் தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக தொழில்நுட்பப்பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. இப்பொழுது அது நான்கு பெரிய பயிற்சி நிலையங்களாக வளர்ந்துள்ளது அவை முறையே.

- நீர் மின் பயிற்சி நிலையம், குதிரைக்கல்மேடு
- அனல் மின் பயிற்சி நிலையம், வட சென்னை
- மின் அனுப்புகை மற்றும் விநியோகம் பயிற்சி மற்றும் மேம்பாடு நிலையம், மதுரை
- அலுவலர் பயிற்சி கல்லூரி, சென்னை

மேற்கண்ட பயிற்சி மையங்களில் அனல், புனல், அனுப்புகை மற்றும் விநியோகம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் 10 சிறிய தொழில்நுட்பப்பயிற்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், பணியாளர்களுக்கு, விநியோகம் தொடர்பான பயிற்சி அளிப்பதற்காக திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர், கொரட்டூர், பசுமலை, கோயம்புத்தூர், விருதுநகர், திருச்சி, மேட்டூர் அணை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

புதைவட இணைப்பு பயிற்சி மையம் ஒன்று செய்முறை பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்கள் மத்திய மின் அமைப்பின் (Central Electricity Authority) முதல் தர அங்கீகாரம் பெற்றுள்ளதை பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

- மின் அனுப்புகை மற்றும் விநியோகம் பயிற்சி மற்றும் மேம்பாடு நிலையம், மதுரை
- நீர் மின் பயிற்சி நிலையம், குதிரைக்கல்மேடு
- அனல் மின் பயிற்சி நிலையம், வட சென்னை

தமிழ்நாடு மின்சார வாரியம் தான் முதன் முதலில் பயிற்சிக்காகவே ஒரு பயிற்சிக் கோட்பாட்டை இந்தியாவில் உருவாக்கியது. (Training Policy) ஒவ்வொரு வருடமும் அனைவருக்கும் பயிற்சி என்பது அதன் நோக்கமாகும்.

**தேசிய அளவிலான பயிற்சிகள்**

மத்திய அரசின் மின்துறை அமைச்சகத்தில் அங்கம் வகிக்கும் தேசிய ஊரக மின் மயமாக்கல் கழகம் தனது காலாண்டு மலரில் கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த 2009 – 10ம் ஆண்டில் மூன்றாம் மற்றும் நான்காம் நிலை ஊழியர்களுக்கான தேசீய அளவிலான “மின் விநியோக மேம்பாடு” பற்றிய பயிற்சியினை அகில இந்திய அளவில் அதிகப்படியாக 3668 நபர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளது என்று தனது முன்பக்க அட்டையில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய மின்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மின் நிதி கழகமானது (Power Finance Corporation), Unite States AID for Infrastructure Development உதவியுடன் இணைந்து ஒப்பந்தம் செய்து Distribution Reforms Upgrades and Management பயிற்சிகள் அகில இந்திய அளவில் உள்ள பொறியாளர்களுக்காக பயிற்சி நிலையங்களில் வழங்கப்படுகின்றன. இது மாதிரியான பயீற்சிகளில் இந்தியாவில் உள்ள பொறியாளர்கள் கலந்து உரையாடுவதால் அவற்றில் சிறப்பான வழிமுறைகளை கண்டறிய முடிகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய மின்துறை அமைச்சகத்தின் வேண்டுகோளின்படி மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணித்தொகுதி பணியாளர்களுக்கான தேசிய அளவிலான பயிற்சித் திட்டத்தை ஊரக மின் மயமாக்கல் (Rural Electrification Corporation) மூலம் ஒப்பந்தம் செய்து பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

Power Finance Corporation (PFC) மின் நிதி கழகம் நிதி உதவியுடன் ஒப்பந்தம் செய்து தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய மின்துறை அமைச்சகத்தின் வேண்டுகோளின்படி நமது மூன்றாம் மற்றும் நான்காம் நிலை பணியாளர்களுக்கான

R-APDRP பயிற்சி திட்டத்தின் வகுப்புகள் பயிற்சி மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் ஊரக மின் மயமாக்கல் வசம் ஒப்பந்தம் செய்து கொண்டு பொறியியல் பட்டப்படிப்பு மின்னியல் கடைசி ஆண்டு மாணவர்களுக்காக "Franchisee" திட்டப்பாடங்கள் பயிற்சி நிலையங்களின் மூலம் நடத்தப்பட்டன.

புதுச்சேரி, அந்தமான் நீக்கோபார் தீவுகள் போன்ற அண்டை மாநிலங்களில் பணிபுரியும் அலுவலர் மற்றும் ஊழியர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பயிற்சித்துறை பயிற்சிகளை நடத்திக் கொடுத்தது.

1962ம் வருடம் துவங்கப்பட்ட புதைவட பயிற்சி நிலையம் **இந்தியாலேயே** தனித்தன்மை வாய்ந்த பயிற்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி மையம் கேபிள் பயிற்சியாளர்களுக்கான செயல்முறை பயிற்சியினை நடத்திவருகின்றது.

ENMASS பயிற்சி அனைத்து அலுவலர் / மற்றும் ஊழியர்களுக்கான ஒவ்வொரு வருடமும் முன்று முதல் ஐந்து நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வருடத்தில் இரண்டு மாதங்கள் (Enmass Knowledge Updating Programme) (EKUP) மாதங்களாக கணக்கில் கொள்ளப்படும்.

சிறப்பு பயிற்சி வகுப்புகள் அந்தந்த அலுவலகங்களில் உள்ளவர்களுக்கான பணித்தேவைக்கேற்ப அளிக்கப்படுகின்றது. எல்லா பயிற்சிகளும் அலுவலர்கள் மற்றும் வாரிய மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படுகின்றன.

பயிற்சி மையங்கள், விநியோக மின் மாற்றிகளை தத்து எடுத்துக் கொண்டு நன்முறையில் பராமரிப்புப் பணிகளைச் செய்து வருகின்றன. விநியோக மின் மாற்றியின் சிறிய பழுதுகளை அவைஇருக்கும் இடத்திலேயே சரி செய்து கொடுப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்றுவிப்பவர்கள் மின்விநியோக அலுவலகங்களில் சென்று நில இணைப்பின் (Earthing) அவசியத்தை தெரிவித்து விநியோக மின்மாற்றி பழுது அடைவதை தவிர்ப்பதற்கு உரிய காரணங்களை விளக்குகிறார்கள். இப்படி செய்ததின் மூலம் விநியோக மின்மாற்றி பழுது அடைவது மிகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் மின் கருவிகள் மற்றும் மின் உதிரிபாக உற்பத்தியாளர்களின் ஆலைகளிலேயே பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற மின் அமைப்பு மறு சீரமைப்பு, வாடிக்கையாளர்களின் மன நிறைவு, மின்சார சட்டம்-2003 தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 போன்ற பல்வேறு தலைப்புகளில் வாரியப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு உற்பத்தியாளர்கள் மற்றும் நிறுவனங்கள், தங்களது உற்பத்தி பொருட்கள் குறித்து வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதிப்பதின் மூலம், தொழில் நுட்ப துறை சார்ந்த புதிய வரவுகள் குறித்த தகவல்கள், நம் பணியாளர்களைச் சென்று சேருவதற்கான வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புதிதாக இந்நிறுவனத்தில் பணியில் சேரும் அலுவலர் / பணியாளர்களுக்கு துவக்க நிலை (Induction) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பிற மாநிலங்களில் உள்ள பயிற்சி நிலையங்களுக்கு ESCI / Hyderabad, PMI, NTPC, CPRI, NPTI தங்கள் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்கு வாரிய அலுவலர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

ஜப்பானில் பயிற்சியினை மேற்கொள்ள பயிற்சி மையத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் சென்று வந்துள்ளார்.

இந்நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் உயர் நிலை படிப்பிற்கான (Post Graduate Studies) பரிந்துறை தேவைக்கேற்ப செய்யப்படுகிறது.

சமீபத்திய மேம்பாடுகள் குறித்தும், தொழில் துறை மற்றும் கல்வித்துறைகளின் நெருக்கத்தை மேம்படுத்துவதற்கும் கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள அப்பாதுரை அமைப்பு மூலம் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

<u>தொழிற்பழகுநர் பயிற்சி</u>

பட்டம், பட்டயம் பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் ஐ.டி.ஐ படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பழகுநர் பயிற்சி சட்டப்படி தொழிற் பழகுநர் பயிற்சி (Apprenticeship Training) அளிக்கப்படுகிறது. (மேலும் விபரங்களுக்கு இணைப்பு 1)

உள்முகப்பயிற்சி

பொறியியல் பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் உள்முகப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றது. (மேலும் விபரங்களுக்கு இணைப்பு 2)

செய்முறை திட்டம் (Project Work)

பொறியியல் பட்ட மாணவர்களுக்கு செய்முறைத்திட்டம் பயிற்சி குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேலும் விபரங்களுக்கு இணைப்பு 3)

நிறுவனங்களின் செயல் விளக்கம் (Presentation / Seminar)

தலைமை அலுவலகத்தில், பிற நிறுவனங்கள் தங்களது துறை சார்ந்த (Companies Presentation/Seminar Class) விளக்கங்களை நம் அலுவலர்களுக்கு செயல் விளக்கம் மூலமாக காண்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (மேலும் விபரங்களுக்கு இணைப்பு 4)

மின் ஆற்றல் சேமிப்பு மற்றும் மின்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வகுப்புகள் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் இத்துறையின் மூலம் கட்டணம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகின்றது.

விருப்பம் உள்ள அமைப்புகள், கல்வி நிலையங்கள் இதுபோன்ற வகுப்புகள் தங்களின் இடங்களில் நடத்தபட வேண்டுமென்றால் பொதுமேலாளர் / மனித வள மேம்பாடு / சென்னை வசம் தொடர்புகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் சார்ந்த பயிற்சிகள் வேண்டுமெனில் அதற்கான பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்தி கற்றுக் கொள்ளலாம் இதற்காக விருப்பமுள்ள நிறுவனங்கள் பொது மேலாளர்/மனிதவள மேம்பாடு/சென்னை வசம் தொடர்பு கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.